# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 17-08-2020 திங்கள்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

**பொருள் எண். 1**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 31-07-2020 அன்று மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பி.பி.முனுசாமி கடை எண்.G2-க்கு இருநபர்களும், குழித்துறை வணிகவளாகம் கடை எண்.4-க்கு ஒரு நபரும் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளனர்.

I) பி.பி.முனுசாமி வணிகவளாக கடை "G2"

| | |
|---|---|
| (i) Y. தேவகுமார்,<br>தேவவிலாசம்,<br>பாலவிளை,<br>குழித்துறை அஞ்சல். | மாத வாடகை<br>ரூ.9300/- |
| (ii) K. சிவபிரசாத்,<br>காப்புக்காடு | மாத வாடகை<br>ரூ.9000/- |

II) குழித்துறை வணிகவளாக கடை எண்.4

| | |
|---|---|
| (i) Y. தேவகுமார்,<br>தேவவிலாசம்,<br>பாலவிளை,<br>குழித்துறை அஞ்சல். | மாத வாடகை<br>ரூ.5000/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 மற்றும் 2-ல் திரு. தேவகுமார் என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேலும் மேற்படி கடைகள் 20-11-2018, 5-12-2018, 28-12-2018, 11-1-2019, 26-2-2019, 26-6-2019, 21-8-2019, 12-9-2019, 29-10-2019, 20-11-2019, 21-1-2020, 20-2-2020, 28-5-2020 மற்றும் 12-6-2020 வரையில் 14 முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலம்

மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கோரியதில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே வரிசை எண்.1-ல் கண்ட உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஒப்பு கொள்ளலாம். வரிசை எண்.2-க்கு மறு ஏலம் கோரலாம்.

ந.க.எண்.2036/2018/அ2.

**நகர்மன்ற தீர்மான எண் : 3561**

**வரிசை எண் 1-ல் உள்ள திரு. ஒய். தேவகுமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 2</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 13-08-2020 அன்று மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பி.பி.முனுசாமி கடை எண்கள் G4 மற்றும் G5-க்கு தலா இரு ஒப்பந்தப்புள்ளிகளும், மார்த்தாண்டம் பேருந்து நிலையம் B-பிளாக் கடை எண்.. B11, B12 கடைகளுக்கு தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

I) பி.பி.முனுசாமி வணிகவளாக கடை G4

| | |
|---|---|
| ( i ) A. சுரேஷ்,<br>மேலவிளை,<br>காப்புக்காடு. | மாத வாடகை<br>ரூ.5500/- |
| (ii ) K. பிரபின்,<br>கண்ணன்விளாகம்<br>காப்புக்காடு. | மாத வாடகை<br>ரூ.6100/- |

II) பி.பி.முனுசாமி வணிகவளாக கடை G5

| | |
|---|---|
| (i ) S. அனந்தசயனன்,<br>புறவிளைவீடு,<br>முளஞ்குழி அஞ்சல். | மாத வாடகை<br>ரூ.4800/- |
| (ii ) K. சிவபிரசாத்,<br>கண்ணன்விளாகம்<br>காப்புக்காடு. | மாத வாடகை<br>ரூ.5500/- |

III) மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடை எண். B11

| | |
|---|---|
| (i ) T. சேகர்,<br>B.O.C. தெரு,<br>மார்த்தாண்டம் | மாத வாடகை<br>ரூ.5500/- |
| (ii ) C. சுதர்,<br>தெற்குவிளைவீடு<br>மார்த்தாண்டம். | மாத வாடகை<br>ரூ.5300/- |

IV) மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடை எண். B12

| | |
|---|---|
| (i ) T. சேகர்,<br>B.O.C. தெரு,<br>மார்த்தாண்டம் | மாத வாடகை<br>ரூ.5500/- |
| (ii ) C. சுதர்,<br>தெற்குவிளைவீடு<br>மார்த்தாண்டம். | மாத வாடகை<br>ரூ.5300/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.I முதல் IV வரையிலான கடைகளுக்கு 20-11-2018, 5-12-2018, 28-12-2018, 11-1-2019, 26-2-2019, 26-6-2019, 21-8-2019, 12-9-2019, 29-10-2019, 20-11-2019, 21-1-2020, 20-2-2020, 28-5-2020, 12-6-2020 மற்றும் 31-7-2020 வரையில் 15 முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே வரிசை எண்.I முதல் IV வரையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளித் தொகைகளை ஒப்புதல் வழங்கலாம்.

அ.கு.- மேற்படி கடைகளுக்கு 20-11-2018 முதல் 13-08-2020 வரை 15 முறைகள் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கேட்டும் ஒருவரும் வராததாலும் மேலும் நிதியிழப்பு ஏற்படுவதை தடுக்கும் வகையில் தற்போது கிடைக்கப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2036/2018/அ2.

**நகர்மன்ற தீர்மான எண் : 3562**

**வரிசை எண்கள் 1 முதல் 4 வரை குறிப்பிடப்பட்டுள்ள கடைகளுக்கு 20-11-2018 முதல் 13-08-2020 வரை 15 முறைகள் ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் ஒருவரும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கோராத நிலையில் தற்போது கிடைக்கப் பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மேலும் நகராட்சிக்கு நிதிநிலை இழப்பை தவிர்க்கும் பொருட்டு அனுமதிக்கலாம்.**

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலை பகுதி கி.மீ. 604/252 - 607/060 வரையில் நெடுஞ்சாலைத் துறையினரால் மேம்பாலம் ஒன்று கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேம்பாலக்கட்டுமானத்தின் போது இப்பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் விநியோகம் மற்றும் Pumping Main குழாய்கள் பழுதடைந்து குடிநீர் வினியோகம் பாதிப்படைந்தது. அப்பொழுது மேம்பாலப்பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் பணி முடிவடைந்ததும் குழாயினை முற்றிலுமாக மாற்றியமைத்து தருவதாகக் கூறப்பட்டது. ஆனால் பணி முடிவடைந்தும் குழாய்கள் மாற்றியமைக்கப்படாமல் இருப்பதினால் அடிக்கடி பழுது ஏற்படுவதுடன் நகராட்சிக்கு நிதியிழப்பும் பொதுமக்களுக்கு இடையூறின்றி குடிநீரை விநியோகிக்க இயலாத நிலையும் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குழாய்களை புதிதாக மாற்றியமைக்கும் பணிக்கான செலவினத்தை நகராட்சிக்கு வழங்குமாறு தேசிய நெடுஞ்சாலைத்துறையினரை அறிவுறுத்தினார்கள். அதன்படி தேசிய நெடுஞ்சாலைத்துறையினரிடமிருந்து ரூ.43.80 இலட்சம் நிதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி நிதியில் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் லெட்சுமி ஜீவல்லரி காந்திமைதானம் முதல் மேம்பாலத்தூண் எண்.31 சி.எஸ்.ஐ. மிஷின் ஆஸ்பத்திரி அருகில் வரை 975.00M. 'தூரத்திற்கு ஏற்கனவே உள்ள 160MM PVC குழாயை அகற்றிவிட்டு புதிதாக 150MM DI குழாய் பதிப்பதற்கு ரூ.46.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டு தொகையான ரூ.46.00 இலட்சத்தில் நெடுஞ்சாலை துறையிடமிருந்து பெறப்பட்ட நிதியில் ரூ.43.80 இலட்சமும் மீதமுள்ள 2.20 இலட்சம் நிதியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3563**

**அனுமதிக்கப்படுகிறது**

# குழித்துறை நகர்மன்றத்தின் 20-08-2020 வியாழக்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

**பொருள் எண். 1**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலை பகுதி கி.மீ. 604/252 - 607/060 வரையில் நெடுஞ்சாலைத் துறையினரால் மேம்பாலம் ஒன்று கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேம்பாலக்கட்டுமானத்தின் போது இப்பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் விநியோகம் மற்றும் Pumping Main குழாய்கள் பழுதடைந்து குடிநீர் வினியோகம் பாதிப்படைந்தது. அப்பொழுது மேம்பாலப்பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் பணி முடிவடைந்ததும் குழாயினை முற்றிலுமாக மாற்றியமைத்து தருவதாகக் கூறப்பட்டது. ஆனால் பணி முடிவடைந்தும் குழாய்கள் மாற்றியமைக்கப்படாமல் இருப்பதினால் அடிக்கடி பழுது ஏற்படுவதுடன் நகராட்சிக்கு நிதியிழப்பும் பொதுமக்களுக்கு இடையூறின்றி குடிநீரை விநியோகிக்க இயலாத நிலையும் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு குழித்துறை நகராட்சிக்குட்பட்ட சி.எஸ்.ஐ. மருத்துவமனை அருகில் மேம்பாலத்தூண் எண்.31 முதல் நகராட்சி எல்கை ஐஸ்வரியா மருத்துவமனை வெட்டுவெந்நி வரை 330மீ. நீளத்திற்கு ஏற்கனவே உள்ள 160MM PVC குழாயை அகற்றிவிட்டு புதிதாக 150MM DI குழாய் 300மீ. நீளத்திற்கு 90MM PVC Pipe பதிப்பதற்கு ரூ.25.00 லட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3564**

**அனுமதிக்கப்படுகிறது**

# குழித்துறை நகர்மன்றத்தின் 28-08-2020 வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

**பொருள் எண். 1**

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பதிவு பெற்ற திரு.D. ஜாண் மகேஷ் 2011-2012-ம் ஆண்டு முதல் 2016-2017-ம் ஆண்டு முடிய செய்த பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை ரூ.1,30,271/- (EMD & FSD) காலம் கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் அதனை திருப்பி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
அ.கு.:- அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1267/2020/பி1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3565**
**அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண். 2**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவன இயக்குநர், கோயமுத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.276/2020/அ2, நாள் 18-08-2020-ல் 2020-2021-ம் ஆண்டிற்கான நகராட்சி பங்குத்தொகை ரூ.20,000/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.20,000/- வருவாய் நிதியிலிருந்து தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூருக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.526/2012/சி1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3566**
**அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண். 3**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள 7

எண்ணம் மின் மோட்டார்கள் சப்பாத்து நீரேற்று நிலையத்திலுள்ள 15 H.P. Submercible Motor, 21 வார்டுகளிலும் குடிநீர் பயன்பாட்டிற்கு இல்லாத இதர உபயோகத்திற்கு அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள 1.00 H.P., 1½ H.P., 2 J.P. Compressor மோட்டார்கள் 1 H.P., 1½ H.P., Jet Motor ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் பழுது நீக்கம் செய்திட 9-7-2020-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.P. ஜெயப்பிரகாஷ் | 9.90 | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| 2 | திரு.A. ஆன்றணி | | மதிப்பீட்டை விட 0.26% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.P. ஜெயப்பிரகாஷ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றத்தின் அனுமதிக்கு.

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்கான செலவு தொகையை குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3567**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 ஆர்.சி.தெருவில் சேவியர் ஆடிட்டோரியம் முதல் சிறுபாலம் (Culvert) வரை மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து பக்கச்சுவர் உடைந்து கழிவுநீர் வீடுகளின் முன்பகுதியில் ஒடுகிறது. பொது மக்களின் புகாரின் அடிப்படையில் மேற்படி இடத்தினை சரி செய்திட புதிதாக மழைநீர் வடிகால் அமைத்து Cover Slab போட உத்தேச செலவினம் மதிப்பீடு ரூ.6,20,000/-த்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து செலவிடவும் மேற்படி பணி செய்திட மன்றத்தின் அனுமதிக்கும்.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3568**
**அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண். 5**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான இடங்களில் தமிழ்நாடு அரசு விதிமுறைகளின்படி தீயணைப்புத் துறை வழிகாட்டுதல்படி பேருந்து நிலையங்கள், நீர் சுத்திகரிப்பு நிலையம், அம்மா உணவகம் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தீ விபத்துகள் ஏற்படாத வண்ணம் தடுக்கும் முறையில் நகராட்சிக்குட்பட்ட சில முக்கிய இடங்களில் Fire Extinguisher அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.53000/-த்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீற்கு மன்றத்தின் அனுமதிக்கும் வருவாய் நிதியில் இருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கும்.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3569**
**அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண். 6**

குழித்துறை நகராட்சியின் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் நகராட்சி பகுதிக்குட்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழதுளை கிணறுகளின் Panel Board Pumping மற்றும் Distribution Electric Line மற்றும் மோட்டார் பராமரிப்பு தவிர்த்து மோட்டாரை இயக்குவதற்கு தேவைப்படும் உபகரணங்களின் பராமரிப்பு ஆகிய அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளவும் மோட்டார் பராமரிப்பு பணியில் இதற்கு வழிவகை செய்யப்படாத காரணத்தினால் மேற்கண்ட பணிகள் அத்தியாவசிய பணிகள் ஆகையாலும் குடிநீர் வினியோக அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசர

அவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்படி பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1231/2020/இ1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3570**
**அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண். 7**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய சாலையில் மார்க்கட் முன்பக்கத்தில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி ரூ.4.10 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 25-5-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எஸ். பாபு,<br>கீழ்குளத்தன் கரை | மதிப்பீட்டை விட 0.06% குறைவு |
| 2 | திரு.சி. சுரேஷ்<br>கண்ணக்கோடு | மதிப்பீட்டை விட 1.91% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.எஸ். பாபு என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3571**
**அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண். 8**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை மற்றும் கல்பாலத்தடியில் உள்ள

கட்டண கழிப்பறை பழுதடைந்து மிகவும் மேசமான நிலையில் இருப்பதால் பொது மக்களின் புகாரின் அடிப்படையிலும், குத்தகைதாரரின் புகாரின் அடிப்படையிலும் மேற்கண்ட இரு கழிப்பறையினை முழுமையாக சரி செய்திட PVC Door, Front grill gate, Floor Marbonite, Water closet, Urinal closet, Light Fittings Water Supply Items Painting, Ventilator glasses ஆகிய வேலைகள் செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.4,00,000/-த்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்ற ஒப்புதலும் இதற்காகும் செலவினத்தை பொது நிதியில் இருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கும்.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1185/2020/இ1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3572**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 9</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையம், நரியன்விளை, சப்பாத்து நீரேற்று நிலையம் ஆகியவற்றில் குடிநீர் சுத்திகரிப்பு பணிகள் செய்திட பொருத்தப்பட்டுள்ள Liquid Chlorination களுக்கு தேவையான Bleaching Liquid Sodium Hypochlorin solution வாங்கி பயன்படுத்தி சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ள நாள் ஒன்றிற்கு தலைமை நீரேற்று நிலையத்திற்கு 150 லிட்டர் வீதம் மாதம் ஒன்றிற்கு 4500 லிட்டர், சப்பாத்து நீரேற்று நிலையத்திற்கு நாள் 1-க்கு 75 லிட்டரும் மாதம் 1-க்கு 2250 லிட்டரும் ஆக மொத்தம் 6750 லிட்டர் தேவைப்படுவதால் 7 மாதங்களுக்கு 42000 லிட்டர் Bleaching Liquid Sodium Hypochlorin solution தேவைப்படுகிறது. ஆகவே மேற்படி பொருட்கள் வாங்கிட உத்தேச செலவினம் ரூ.8,70,000/-த்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்ற ஒப்புதலும் மேற்படி பொருட்கள் வாங்கிட குடிநீர் நிதியில் செலவு செய்தி மன்றத்தின் அனுமதிக்கும்.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1321/2020/இ1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3573**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.10</u>**

குழித்துறை நகராட்சி வெட்டுவெந்நி சந்திப்பில் நகராட்சிக்கு சொந்தமான முனிசாமி வணிகவளாகம் 3 மாடி கட்டிடம் உள்ளது. இந்த கட்டிடம் 2007-2008-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. மேற்படி கட்டிடம் 13 ஆண்டுகள் ஆகிய நிலையில் கட்டிடத்தின் மேற்கூரையில் தண்ணீர் கசிவு ஏற்பட்டு வணிகவளாகம் கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் இயங்கி வரும் Federal வங்கி உள்ள கணனி மற்றும் மின்சாதனங்கள் பழுது ஏற்பட்டுள்ளது என்று வங்கி மேலாளரின் நாள் 20-05-2020-ம் கடிதத்தின் அடிப்படையில் மேற்படி கட்டிடத்தில் உள்ள பழுதுகளை சரி செய்திடவும் (weathering Course with prossed tiles) ஆகியவற்றை மாற்றி Cement concrete தளம் அமைத்து Coolavt Paint அடித்து நீர்கசிவினை தடுத்திட உத்தேச மதிப்பீடு ரூ.4,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்ற ஒப்புதலும் மேற்படி பணிகள் பொது நிதியில் செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கும்.

அ.கு. - மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1322/2020/இ1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3574**

**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.11</u>**

குழித்துறை நகராட்சியின் கணனி பிரிவில் 6 KVA online UPS 1 எண்ணம் 100 Ait online Battery 16 எண்ணமமும் புதியதாக வாங்கவும் 6 KVA online UPS 1 எண்ணம் வருடாந்திர பராமரிப்பு செய்யவும் ரூ.3.90 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 28-08-2020-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | R.J. Power,<br>Marthandam | மதிப்பீட்டை விட 0.12% குறைவு |
| 2 | Annai Generaters<br>Spare & Services,<br>Nagercoil. | மதிப்பீட்டை விட 2.46% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.R.J. Power என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3575**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.12</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் உரக்கிடங்கில் CCTV கேமரா பொருத்தும் பணிக்கு ரூ.55000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 28-08-020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | Rapid Refills,<br>Nagercoil | மதிப்பீட்டை விட 0.89% குறைவு |
| 2 | Kenith Computers,<br>Nagercoil. | மதிப்பீட்டை விட 4.27% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் Rapid Refills கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3576**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.13</u>**

குழித்துறை நகராட்சி அலுவலகத்தில் 1000 சதுர அடியில் C.L.C. அறை அமைக்க மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.MT4/2417/2017, நாள் 3-6-2018-ன்படி அறை அமைக்க Joint Director Project Officer கன்னியாகுமரி மாவட்டம் தனி அறை அமைத்தல் மற்றும் சில பராமரிப்பு பணிகள் செய்த வகையிலும் நகரமைப்பு ஆய்வாளர் அறைக்கு Aluminium Partion அமைத்தல், Alumunum Door அமைத்தல், ஆணையர் அறையில் உள்ள கழிப்பறைக்கு PVC Door அமைத்தல், பொறியியல் பிரிவில் உள்ள கழிப்பறைக்கு PVC Door அமைத்தல்,

மின் வசதிகள் சரி செய்து Wall Mount Fan பொறியாளர் அறை, பொது பிரிவிற்கு Celing fan, Public waiting Place-க்கு Celing fan அமைத்தல், தெருவிளக்கு பராமரிப்பு மின் சாதனங்கள் வைப்பதற்கு தனி அறை அமைத்தல், மேலும் Vehicle sheed அமைக்கும் பணிகள் சேர்த்து ஆக மொத்த பணிகளுக்கு உத்தேச மதிப்பீடு ரூ.4,70,000/-த்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்ற ஒப்புதலும், மேற்படி பணிகள் செய்வதற்கும் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கும்.
அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1320/2020/இ1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3577**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.14</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11-ல் வெட்டுவெந்நி பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆணையர் குடியிருப்பு கட்டிடம் கட்ட உத்தேச மதிப்பீடு ரூ.20.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நகர் மன்றத் தீர்மானம் எண்.3429, நாள் 31-12-2019-ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

தற்போது ஆணையர் குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு பெறப்பட்ட கட்டிட கலை வல்லுநரிடமிருந்து APK Architets/ Architets/ Interiors/ Turnkey/Pine/ Coimbatore அவர்களால் Plan, Drawing, Structural Design வடிவமைப்பு பெறப்பட்டுள்ளது. இதில் மேற்படி பணிக்கு திருத்திய மதிப்பீடு ரூ.35.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. ஆகவே ஏற்கனவே மன்ற அனுமதி அளிக்கப்பட்ட தொகையான ரூ.20.00 லட்சத்தை விட கூடுதலாக திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.15.00 லட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ.35.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ஆகவே மேற்படி பணிகள் வருவாய் நிதியில் இருந்து செலவு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3578**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.15</u>**

குழித்துறை நகராட்சி உண்டனாகுழி ரோடு, திருத்துவபுரம் தேசிய நெடுஞ்சாலை அருகில் உள்ள Jesus Higher Secondary School முதல் நகராட்சி எல்கை முடியும் வரை மற்றும் Court Front side Road Court முன்பக்க Main gate முதல் ஆர்.சி.தெரு வரையும் BSNL Office மற்றும் Court Back side Road Court பின்புற நுழைவு வாயில் முதல் Fish Market வரை உள்ள சாலை TURIP 2019-2020 திட்டத்தில் தார் சாலை அமைக்க (Dense Bituminous Machadam மற்றும் Bituminous Concrete தளம் அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசு அனுமதி பெற்று 16-10-2019-ல் வழங்கப்பட்டது. இடைப்பட்ட காலங்களில் மழை மற்றும் Corona-19 ஆகியவற்றில் பணி நடைபெறாத காரணத்தால் சாலைகள் மிகவும் சேதமடைந்து தார் தளம் அமைக்க முடியாத நிலையில் உள்ளது. ஆகவே மதிப்பீட்டில் Wet mix maccadam (WMM) இல்லாத காரணத்தால் தார் தளம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.6,00,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கும் பணிகள் செய்திட வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கலாம்.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3579**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.16</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 27-08-2020 அன்று ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரிசை எண்.1 முதல் 9 வரையிலான இனங்களில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளனர்.

I) மார்த்தாண்டம் தினசரி சந்தை தற்காலிக கடை எண்.13

| வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | T. சுஜி,<br>ஆர்.சி.தெரு, மார்த்தாண்டம் | 4800 |

II) மார்த்தாண்டம் பேருந்து நிலைய A.பிளாக் கடை எண். A2

| வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | M. ஷாஜி,<br>காஞ்சிரகோடு | 8000 |
| 2 | துரைசிங்<br>இருளப்பபுரம், நாகர்கோவில் | 5000 |

III) மார்த்தாண்டம் பேருந்து நிலைய A.பிளாக் கடை எண். A3

| வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | துரைசிங்<br>இருளப்பபுரம்,<br>நாகர்கோவில் | 5000 |

IV) மார்த்தாண்டம் பேருந்து நிலைய A.பிளாக் கடை எண். A4

| வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | துரைசிங்<br>இருளப்பபுரம், நாகர்கோவில் | 5000 |

V) மார்த்தாண்டம் பேருந்து நிலைய A.பிளாக் கடை எண். A5

| வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | சங்கரலிங்கம்,<br>கோட்டார், நாகர்கோவில் | 5000 |

VI) மார்த்தாண்டம் பேருந்து நிலைய A.பிளாக் கடை எண். A12

| வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | R. ரமேஷ்குமார்,<br>புதுசேரி விளை<br>விரிகோடு அஞ்சல் | 5500 |
| 2 | C. விஜயராஜன்,<br>செக்கிட்டவிளை,<br>விரிகோடு அஞ்சல் | 4050 |

VII) மார்த்தாண்டம் பேருந்து நிலைய பழைய கடை எண்.2

| வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | D. ஜெயசிங்,<br>மணியச்சன்விளை<br>மார்த்தாண்டம். | 3500 |
| 2 | W. அஜித்,<br>சாமிவிளை, நட்டாலம். | 2650 |

VIII) மார்த்தாண்டம் பேருந்து நிலைய பழைய கடை எண்.3

| வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | A. ராஜன்,<br>தேமானூர், திருவட்டார் | 3600 |
| 2 | லெனின்குமார்,<br>சிராயன்குழி, காஞ்சிரகோடு | 3000 |

IX) பி.பி. முனுசாமி வணிகவளாக கடை எண். F11

| வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | ராஜேஷ்,<br>மேல்புறம் | 3000 |
| 2 | மினிபிரியா ராஜேந்திரன் | 3500 |

X) பி.பி.முனுசாமி வணிகவளாக கடை எண். F12

| வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | ராஜேஷ்,<br>கரிச்சிட்டான்விளை,மேல்புறம் | 3000 |
| 2 | மினிபிரியா ராஜேந்திரன் | 3500 |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மேற்கண்ட வரிசை எண். I முதல் X வரையிலான கடைகளுக்கு 20-11-2018, 5-12-2018, 28-12-2018, 11-01-2019, 26-02-2019, 26-06-2019, 21-08-2019, 12-09-2019, 29-10-2019, 20-11-2019, 21-01-2020, 20-02-2020, 28-05-2020, 12-06-2020, 31-07-2020 மற்றும் 13-08-2020 வரையில் 16 முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. தொடர்ந்து பலமுறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் கடைகளை உரிமத்திற்கு எடுத்து கொள்ளாத நிலையில் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை தவிர்த்திடும் பொருட்டு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட வரிசை எண்.I. II மற்றும் VI முதல் X வரையிலான பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகைகளை ஒப்புதல் செய்திடவும்,

வரிசை எண். III, IV, V உள்ள இனங்களுக்கு மறு ஏலம் கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2036/2018/அ2.

**நகர்மன்ற தீர்மான எண் : 3580**

**வரிசை எண் 1 முதல் 10 வரையிலான கடைகளுக்கு 20-11-2018 முதல் 13-08-2020 வரையிலும் சுமார் 16 முறைகள் ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கேட்கப்பட்டும் ஒருவரும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கேட்கவில்லை. எனவே தற்போது 1, 2 மற்றும் சி10 ஆகிய இனங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ள ஒப்பந்த புள்ளிகள் அனுமதித்தும் மற்ற இனங்களுக்கு மறு ஏலம்/ஒப்பந்தபுள்ளிகள் பெற்றும் அனுமதிக்கப்படுகிறது**

ஒப்பம்/- திரு.எஸ். மூர்த்தி,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.